வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# "சு.தமிழ்ச்செல்வி நாவல்களில் இடம்பெறும் சிறுதெய்வ வழிபாடு"

| திருமதி த கோமதி | முனைவர் இரா.சிவகுமார், |
|---|---|
| முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்), | இணைப் பேராசிரியர் & நெறியாளர், |
| முதுகலை & தமிழாய்வுத் துறை, | முதுகலை & தமிழாய்வுத் துறை, |
| முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரி | முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரி |
| (தன்னாட்சி),வேலூர்-2 | (தன்னாட்சி),வேலூர்-2 |
| திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,வேலூர் | திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,வேலூர் |
| Mobile No: 9087302585, | Mobile No: 9843677742. |
| gomathidhachana0430@gmail.com. | drrajasivakumar@gmail.com |

ஆய்வுச் சுருக்கம்

மனித வாழ்வில் நடக்கும் அனைத்து செயல்களுக்கும் மனித ஆற்றலை கடந்து ஏனோ ஒரு சக்தி காரணமாக அமைகின்றது. இதை இயற்கை என்பதாகவும் தெய்வம் என்பதாகவும் நம்மில் இரு வேறு வேறுபட்ட நம்பிக்கைகள் நிலவுகின்றன அவ்வகையில் நல்லன கூடிடவும்தீயவை விலகிடவும் மக்களால் கடைபிடிக்கப்பட்டதே தெய்வ வழிபாடு ஆகும். அத்தகைய தெய்வ வழிபாடு பெருந்தெய்வ வழிபாடு சிறு தெய்வ வழிபாடு என இரு முறைகளில் நடைபெறுகின்றன. அதில் சிறு தெய்வ வழிபாடு குறித்துசு.தமிழ்ச்செல்வி நாவலின் வழி நின்று ஆய்வதேஇவ்வாய்வின்நோக்கமாகும்.

## முன்னுரை

மனிதன் பல்வேறு அச்சஉணர்வுகளின் காரணமாக தெய்வத்தை வழிபடக்கூடிய சூழல் உருவாயிற்று. அவ்வகையில் தெய்வ வழிபாடு என்பது மக்களிடையே அவசியமாகிறது. தெய்வ வழிபாடானதுசிறு தெய்வ வழிபாடு, பெரு தெய்வ வழிபாடு எனஇருநிலைகளில் தெய்வங்கள் உள்ளனஎனசங்க இலக்கியங்களின் வழி புலனாகிறது. தெய்வ வழிபாடு இயற்கையின் சீற்றங்கள் மூலம் நிகழ்கின்ற அச்சுறுத்தலுக்கு பயந்து இயற்கை வழிபடக்கூடிய சூழல் உருவானது. மேலும் மனிதன் தன்னை தற்காத்துக் கொள்ளவும் சமய சடங்குகளை தம் வாழ்வில்

நெறிமுறைப்படுத்திக் கொண்டார். அவ்வகையில் சு தமிழ்செல்வி நாவலில் சிறு தெய்வ வழிபாடு என்பது இவ்வாய்வுk கலமாக அமைகின்றது.

வழிபாடு பொருள் விளக்கம்

இறைவனை அடைவதற்கு ஒரு நன்னெறியில் செல்ல பணிப்பது வழிபாடு ஆகிறது. வழிபாடு என்பது மதம், குலம், நாடு, இடம், குடும்பம், பழக்கவழக்கங்கள் முதலியவற்றின் அடிப்படையிலும் பல்வேறு வழிமுறைகளிலும் சங்க காலம் முதல் பின்பற்றப்படுகிறது. அவ்வகையில் மனிதர் அவரவர் விருப்பப்பட்ட தெய்வங்களை, பழக்கப்பட்ட நியமநியதிகளை பின்பற்றி பூசிக்கும் முறையேவழிப்பாடாகும். மக்கள் இயற்கையின் மீதான அச்சத்தின் காரணமாக வணங்க ஆரம்பித்த முறையே வழிபாடு ஆயிற்று. வழிபாட்டு முறைகளை புலவர் பெருமக்கள் தன் இயற்றிய நூல்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய நூல்களில் இறைவணக்கம் கையாண்டுள்ளதுமூலம் காண முடிகிறது. வழிபாடானது சங்க காலத்தினை பகுப்பு முறையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலைஎன ஐவகை திணை பாகுபாட்டிற்க்கு ஏற்றார் போல் மாறுபட்டு காணப்படுகிறது. இதனை தொல்காப்பியர்,

“மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேயமைவரை உலகமும்
வேந்தன் மேயத் தீம்புனல்உலகமும்
வருணன் மேய பெருமை உலகமும்” 1

என்று கூறுவதன் மூலம் அறியலாம்.

சங்க இலக்கியத்தில் வழிபாடு

சங்கச் செய்யுளான பெரும்பாணாற்றுப்படையில்அணங்குஎன்னும் சொல் வழிபாட்டிற்கு உரியதாக இடம் பெற்றுள்ளது.“துணங்கையம் செல்லிக்கு அணங்கு நொடித்தாங்கு” என்ற வரியில்அணங்கு என்றும் தெய்வ வழிபடும் பழக்கத்தினைப் பற்றி கூறுகிறது.

மேலும் சங்க காலம் முதலேபோர்க்களத்தில் வீரமரணம்அடைந்தவருக்கு நடுகல் வழிபாடு முறை இருந்து வருகிறது என்பதை இலக்கியங்களில் காணமுடிகிறது.

தொல்காப்பியம் இதனை,

“காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்

சீர்தகுமரபில் பெரும்படை

வாழ்த்தலென்று

இது மூன்று மரபிற்கல்”2

என்று தொல்காப்பியர் அறநிலைகளில் நடுகல்வழிபாடு உள்ளதாக குறிப்பிடுவதை அறியலாம்.

திருக்குறளில் காணப்படும்

“என்ஐமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்று

முன்னின்று கல்நின் றவர்”3

இக்குறளின்று நடுகல் வழிபாடு பழக்கம் பழந்தமிழரிடம் இருந்ததனை அறிந்து கொள்ளஇயலுகிறது.

பழந்தமிழரின் வாழ்வியல் மற்றும் பண்பாட்டின் அரிச்சுவடியாக அமைந்துள்ள சங்க இலக்கியத்தில் வழிபாட்டு முறைகள் என்பது பல்வேறு இடங்களில் காணப்படுகின்றது.

உதாரணமாக

“வெண் நுனை அம்பின் விசையிட வீழ்ந்தோர்

என்னும் வரம்பு அரியா

உவல் இடு பதுக்கை”4

இவ்வாறு நம் தமிழ் இலக்கியங்கள் கூறும் வழிப்பாட்டு முறைகளை ஆய்வறிஞர்கள் பெருந்தெய்வ வழிபாடு,சிறுதெய்வ வழிபாடு என்று இரு வகைகளாக பிரிக்கின்றனர்.

பெருந்தெய்வ வழிபாடு

“மூவகை ஆரேயில்ஓர்அழல் முளிய

மாதிரம் அழலஎய்துஅமரர் வேள்விப்

பாகம் உண்ட பைங்கன் பார்ப்பான்”5

இவ்வரிகளில் சிவபெருமான் தன் சிரிப்பினில் அரக்கனை அழித்தான் என்னும் புராண வரலாறு காணப்படுகிறது.

“ஆலமர் கடவுள்ளானநின்செல்வம்”6

என்றசிவபெருமான் பற்றிய செய்திகளை காண இயலுகின்றது. இவ்வரிகளின் வாயிலாகவும், தொல்காப்பியரின் திணைப்பகுப்பில் காணப்படும் தெய்வ முதன்மை

இவற்றின் வாயிலாக சங்ககாலத்தில் இருந்த பெருந்தெய்வ வழிபாடு அறியப்படுகிறது. இந்து மத கடவுள் ஆகிய சிவன், திருமால் போன்ற தெய்வங்கள் பெரும் தெய்வங்களாக கருதப்படுகின்றன.

சிறு தெய்வம் விளக்கம்

சிறு தெய்வங்கள் பாமர மக்களின் வாழ்வில் சிறந்த இடத்தை பெறுகின்றன. பண்டைய மரபு காரணமாகவும் சில நன்மைகளின் காரணமாகவும்சிறு தெய்வங்கள் நாட்டுப்புற மக்களால் வணங்கப்படுகின்றன. பெருந்தெய்வ வழிபாடு மிகுதியான இடங்களில் பதவி செல்வாக்கு பெற்றிருந்தாலும் சிறு தெய்வ வழிபாடு மக்களிடம் சிறப்பு பேச்சு இன்றும் வழக்கில் உள்ளது. அய்யனார், முனியன், வீரன்,bகருப்பசாமி, மதுரை வீரன் காத்தவராயன், பெரியாண்டவர், மாரியம்மன், காளியம்மன், பிடாரி, அங்காளம்மன் முத்தாலம்மன் போன்ற தெய்வங்கள் சிறுந்தெய்வங்களாக வணங்கப்படுகின்றன. சிறு தெய்வ வழிபாடு என்பது நாட்டா தெய்வங்களை வழிபடும் முறையாகும். தெய்வ வழிபாட்டிற்கு காரணம் அச்சமும் அன்பும். கலைக்களஞ்சியம் கூறுவது போன்று ஆதிக்குடிகள் இயற்கையில் காணும் தீ, இடி, பெருமழை, பூகம்பம் போன்ற அச்சம் தரும் நிகழ்ச்சிகளுக்கும் நோய்களுக்கும்காரணம் உலகின் கண் உலாவும். கணக்கற்ற ஆவிகளை என்று நம்பி இருந்தனர். அந்த ஆவிகளின் சினத்தை தணிக்க அவற்றை தேவதைகளாக கொண்டு வழிபட்டனர். சிறு தெய்வ வழிபாடு திட்டவட்டமாக வரையறை இல்லாதது வழிபாட்டு முறைகளை மரபாக பின்பற்றப்படுவது. நாட்டுப்புற தெய்வ வழிபாடு எல்லாம் முன்னோர்களின் வழிப்பட்ட வழியே நடைபெறுகின்றது.

நாட்டுப்புற தெய்வங்கள்

நாட்டுப்புற தெய்வங்கள் என்பவை நாட்டுப்புற மக்களான கிராம மக்கள் வழிபடுகின்ற தெய்வங்கள் ஆகும். இந்த தெய்வங்களை நாட்டார் தெய்வங்கள் என்றும், சிறு தெய்வங்கள் என்றும் கூறுகின்றன. இந்த நாட்டு தெய்வங்களின் வழிபாடு பெருந்தெய்வங்களின் வழிபாடுகளை போல் அல்லாமல் மாறுபட்டது. இதனை சிறு தெய்வ வழிபாடு என்கின்றனர். நாட்டுப்புறத் தெய்வங்களை,

- ஊர்த் தெய்வம்
- குலத் தெய்வம்

- இனத் தெய்வம்
- வீட்டுத் தெய்வம்
- வெகுசனத் தெய்வம்

என வகைப்படுத்தலாம்.

1) வீட்டுத் தெய்வம்:

தங்களுக்குள் வழிகாட்டியாய் விளங்கி வாழ்ந்து மறைந்த முன்னோர்களையோ, கன்னியாக இருந்த நிலையில் வாழ்ந்து மறைந்த பெண்களையோ தங்களின் வீட்டு தெய்வமாக வழிபடும் மரபு காணப்படுகிறது. இது பெரும்பாலும் பெண் தெய்வமாகவே இருக்கும். இதனை வீட்டு சாமி, குடும்ப தெய்வம், கன்னி தெய்வம் என கூறுவதும் உண்டு.

2) ஊர்த் தெய்வம் :

வீட்டை காப்பது வீட்டு தெய்வம். குலத்தை காப்பது குலதெய்வம். இனத்தாரை காப்பது இனத்தெய்வம் என்ற வகையில் ஊரில் வாழும் மக்கள் அனைவரையும் காப்பது ஊர் தெய்வமே ஆகும். இவற்றை ஊர்சாமி, ஊர் தேவதை, கிராம தேவதை, ஊர் காவல் தெய்வம் என்ற பெயர்களில் குறிப்பிடுகின்றன.

3) இனத் தெய்வம் :

பல குலங்கள் சேர்ந்தது ஒரு இனம். ஒரு ஜாதி என்று கூறப்படும். ஒரு குறிப்பிட்ட சாதிக்கென்று உள்ள தெய்வங்கள் இனத் தெய்வங்கள், இனச் சார்புத் தெய்வங்கள், ஜாதி தெய்வங்கள் என்ற பெயர்களில் வழங்கப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட இனத்தாரின் தனித்துவத்தை காட்டும் வகையில் இத்தெய்வங்களின் வழிபாடுகள் சிறப்பாக அமையும். மிகுதியும் பெண் தெய்வங்கள் இனத் தெய்வமாக இருக்கும்.

4) குலத் தெய்வம் :

ஒரு குறிப்பிட்ட மூதாதையின் மரபில் தோன்றியதன் வாயிலாக ஒருவருக்கொருவர் உறவு கொண்டுள்ள குழுவே குலமாகும். இரத்த உறவுடைய பங்காளிகள் ஒரே குலத்தை சேர்ந்தவர்களாக கருதப்படுபவர். இவர்களுள் திருமண உறவு நடைபெறாது. இவ்வாறு அமையும் ஒவ்வொரு குலத்திற்கும் தனித்தனி தெய்வமும், கோயிலும் இருக்கும். இதுவே குலதெய்வம் என்றும், குலதெய்வ கோயில் என்றும் குறிப்பிடுவர். பூப்பு சடங்கு, திருமணம், காதணி, வீட்டு விழா அழைப்பிதழ்களில் குலதெய்வத்தின் பெயர் தவறாக இடம்பெறுவதை காணலாம்.

5) வெகுசனத் தெய்வம் :

ஜாதி, மதம், மொழி என்ற வேறுபாடு இல்லாமல் அனைவரும் சென்று வழிபடும் வகையில் அமைந்த சிறு தெய்வங்களே இங்கு வெகுசான தெய்வங்கள் என்ற பெயரில் விளக்கப்படுகின்றன. சிறு தெய்வ மரபிற்கும் பெருந்தெய்வ மரபிற்கும் இடைப்பட்ட ஒரு கலப்பு வழிபாட்டு மரபாக இவை வளர்த்தெடுக்கப்படுகின்றன.

சிறு தெய்வ கோயில் உருவமைப்பு மற்றும் வழிபாடு:

கோயில் என்ற சொல் இறைவன் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தைக் குறிப்பதாகும். கோயில் என்றவுடன் வானுயர்ந்த கோபுரங்கள், பல வண்ணங்களிலான சிற்பங்கள், நீண்ட மதில் சுவர் என்றெல்லாம் கற்பனைக் காணக் கூடாது.

சிறு தெய்வங்களுக்கென கோயில்கள் பெரும்பாலும் மரத்தடியிலும், குளம், கண்மாய், ஏரி, ஆறு போன்ற நீர் நிலைகளுக்கு அருகிலுமே அமைந்திருக்கும். இக்கோயில்கள் கிழக்கும் வடக்கும் பார்த்து இருத்தல் வேண்டும் என்பது மரபு. சிறு தெய்வங்கள் பலவற்றிற்கும் வழிபாட்டின் போது மட்டுமே புதிதாக உருவ வடிவங்கள் செய்யப்படுகின்றன. வழிபாடு முடிந்த நிலையில் அவற்றைச் சிதைத்து விடுவர். சிறு தெய்வங்களின் பெயரை மட்டுமே நினைவில் கொள்ள முடியும் தவிர உருவங்களை கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. நாட்டுப்புற தெய்வங்களுக்கு விரதம் இருந்தும், உயிர்பலி கொடுத்தும் வழிபாடு செய்யப்படுகின்றது. இவை மட்டுமல்லாமல் வேண்டுதல், நேர்த்திக்கடன், தீ மிதித்தல், தேர் இழுத்தல் போன்னவும் வழிபாட்டு நிலையில் அடங்கும். இத்தெய்வங்களுக்கு பூஜை செய்வோர் பெரும்பாலும் பிராமணர் அல்லாத பூசாரிகள் வழிபாட்டுச் சடங்குகளை செய்வர்.

நாவல் வழி தெய்வ வழிபாடு:

சு.தமிழ்ச்செல்வி நாவல்களில் பெரும்பாலும் சிறு தெய்வ வழிபாடு தொடர்ந்து காணப்படுகின்றது. கிராமப்புற பெண்கள் பெரும்பாலும் தங்களின் மனக்குறைகளை இச்சிறு தெய்வங்களிடமே முறையிடுகின்றன. இச்சிறுத் தெய்வங்களுக்கென சிலைகள் என்று எதுவும் இல்லை. குச்சி, கல், மரம் போன்றவற்றையே சிறு தெய்வங்களாக நினைத்து வழிபட்டனர். மீனவர்களின் தெய்வங்களாக தெக்கத்தி முனி இருப்பதை மாணிக்கம் நாவல் பதிவுச் செய்கிறது. தங்களுக்கு ஏதாவது குறை இருப்பின் தங்களது காவல் தெய்வங்களான முனிக்கு படையல் போட்டு கும்பிட்டனர். “ஒரு நீண்ட குச்சியை எடுத்து வில் போன்ற அமைப்பில் வளைத்து இரண்டு முனைகளையும்

தரையில் ஊன்றினர். வில்லுக்கு நடுவில் அம்புக்குள் இன்னொரு குச்சியை ஊன்றினர் தரையில் ஒன்றிய மூன்றையும் இணைக்கும் படி குறுக்காக நடுவில் ஒரு குச்சியை வைத்து கட்டினர் இதுதான் தெக்கத்தி முனுசாமி கிழக்கு பார்த்து இருந்தது"5 (மாணிக்கம் பக் 302).

இதே தெக்கத்தி முனி ஆற்காட்டு துறை நாவலிலும் இடம்பெறுகிறது. மீனவர்கள் கடலுக்கு செல்லும்போது மீன் அதிகம் கிடைக்கவும், உயிர்பலி இல்லாமல் இருக்கவும், இம்முனிக்கு படையல் போட்டனர் என்ற பதிவு இந்நாவலின் மூலம் அறியலாம். மேலும் மாணிக்கம் நாவலில் "கன்னிகுடி மருத்துவமன் கோயிலுக்கு முன் உட்கார்ந்தால் மருத்துவமனிடம் தன்னுடைய மனக்குறை எல்லாம் சொல்லி அழுதாள்"6 (மாணிக்கம் பக் 302) என்பதன் மூலம் கிராமப்புற பெண்களின் வழிபாட்டு தெய்வமாக கன்னிக்குடி மரித்தியம்மன் இருப்பதைக் காண முடிகிறது.

ஆற்காட்டுத்துறை நாவலில் கணவன் சாமுவேலுடன் முரண் பட்டு வந்து வாழும் சமுத்திர வல்லியிடம் ஊரில் உள்ள கோயில் காளி வந்து உரையாடுவது போன்ற காட்சிகளை காணலாம். அளம் என்ற நாவலில் நொண்டி வீரன் என்ற தெய்வம் பற்றி குறிப்பு உள்ளது. "நொண்டி வீரனுக்கு கோவில் என்று எதுவும் கிடையாது சிலையும் கிடையாது அந்த திடலின் மேற்கு பகுதியில் ஒரு பெரிய பூவரசு மரமும் அதற்கு நேர் எதிரில் 10 தப்பட்டி தூரத்தில் இரண்டு பூவரசு மரங்களும் இருந்தன மேற்கில் உள்ள பெரிய பூவரசு மரத்தில் தான் நொண்டி வீரன் இருந்தது"7. (அளம் பக்கம் 39) என்ற வரி மூலம் தெய்வத்தை மரத்தில் வைத்துக் கொண்டாடினர் என்று அறியலாம். கற்றாழை புதினத்தில் "படாமுனி அம்மன் என்ற பெண்ணை தெய்வமாக வணங்குகின்றனர். படாமுனி அம்மன் சிறுமியாக இருந்தாலும் தன்னுடைய சிறு உடலை மடையில் விழுந்த ஓட்டையில் வைத்து அடைத்து ஏழு எட்டு ஊர்களைக் காப்பாற்றினாள்". எனவே அம்மக்கள் அப்பெண்ணைத் தெய்வமாக கொண்டாடினர் என்ற செய்தி அறிய முடிகிறது.

தொகுப்புரை:

தொடக்க மனிதனின் சிந்தனை விளைவாகத் தெய்வ வழிபாடுகள் தோன்றின. மக்களிடம் தோன்றிய இனக்கலப்பால் வழிபாட்டு முறைகளில் மாற்றங்கள் தோன்றி சிறு தெய்வங்கள், பெருந்தெய்வங்கள் தோன்றின. நாட்டுப்புற மக்களின் வழிபாட்டு முறைகளாகப் பெரும்பாலும் சிறு தெய்வங்கள் உள்ளன. மக்களின் அச்சம், அன்பு,

நன்றி பெருக்கு, எதிர்ப்பு, மனநிறைவு, மகிழ்ச்சி சிந்தனைத்திறன் என பல எண்ணங்களும் உணர்வு நிலைகளும் வெளிப்பட்டு நிற்கின்றனர். இவற்றில் மக்கள் தங்களின் அன்பைச் செலுத்தியும், தங்களை வருத்தியும் தெய்வத்தைத் தன் பக்கம் ஈர்க்கும் வகையில் செயல்பாடுகளை கொண்டிருந்தனர் என்பதை இதன் வழி அறிய முடிகிறது.

மேற்கோள்கள்

1. தொல்பொருள் அகம் நூற்பா 5
2. தொல்புறம்நூற்பா5
3. திருக்குறள்
4. தொல் அகநூற்பா
5. தொல்பொருள்
6. பரி பாடல் வரி
7. புறநானூறு

துணைநின்றநூல்கள்


1. தொல்காப்பியம்_ தொல்காப்பியர்
2. திருக்குறள்- திருவள்ளுவர்
3. மாணிக்கம் _ சு. தமிழ்ச்செல்வி
4. அளம் _ சு. தமிழ்ச்செல்வி
5. கற்றாழை – சு. தமிழ்ச்செல்வி.